உ

மீனுக்ஷிசுந்தரர் துணை.

3 - OCT 1912
MADRAS.

# ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேசர் பேரில் பாட்டுகள்.

இஃது

தஞ்சாவூர்ஜில்லா பாபனாசம்தாலூகா மூகாசா உள்ளிக்கடை

அ. முத்துஸாமி அய்யரவர்கள் குமாரத்தியும் ஷை யூர்

R. சுவாமிநாதய்யரவர்கள் பாரியுமான

**சிவகாமிசுந்தரிஅம்மாளால்**

இயற்றப்பெற்று

**அநேக பக்த ஜனங்களின்**

விருப்பத்தின்படி

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

[...கன் விலை] 1912. [அணா 2.

Q2:417
N12
85516

உ

ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரர்துணை.

# ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரர்

## பேரில்

## பாட்டுகள்.

### சித்திவிநாயகர் ஸ்தோத்திரம்.

மெட்டு - காமுனிவினவே. தாளம் - ஆதி.

பல்லவி.

கரிமுகனே கௌரிபாலா என்னை காத்தருள்செய்யவேணும்.

அனுபல்லவி.

ஜெகதம்பாள் மீனாக்ஷி செல்வகுமாரனே
இகபர தாசாளாய் என்னை நீ ஆக்குவாய். (கரிமுகனே)

சரணம்.

1. அருமையாய் உன்னைப்பெற்ற அம்பிகைபேரில் நான்
பிரும்மானந்த பதம்பாட வரந்தந்தருள்வாய் (கரிமுகனே)

2. அத்திவினாயகா ஐங்கரதேசிகா ஸ்தோத்திரம்சொல்லி உன்
தாள்தன்னில் தான்பணிந்தேன். (கரிமுகனே)

3. சங்கர சித்தி விநாயகமூர்த்தி நீ
எங்கும் நிறைந்த சிவசங்கரன்செல்வனே. (கரிமுகனே)

4. இன்பமுடன் உந்தன் மாதாமீனாக்ஷிபேரில்
அன்பாககவிபாட ஆதரிப்பாயே சொன்னேன். (கரிமுகனே)

5. சுந்தரீ சிவகாமி வல்லிக்கு அருள்தருவாய்
கவலைகள்தீர்த்தென்னை காத்தருள்செய்குவாய். (கரிமுகனே)

REGISTERED 1912 MADRAS
1179

22:417
M12
85516

## ஸரஸ்வதி ஸ்தோத்திரம்.

மெட்டு - கண்ணக கமலா. அடதாளம்.

பல்லவி.

வாணிசரஸ்வதி மங்களதேவி எந்தன்வாக்கில் வந்திட.

அனுபல்லவி.

உந்தனருளினல் இந்தகவியை எந்தன்வாக்கில் உரைத்திட
நான்முகன்தேவியை பாணியில்வீணையும் புஸ்தகபாணியே தோணி
[யென்முன்பாக. (வாணி)

சரணம்.

1. ஏதுமறியாத பேதைகவிக்கி சாதகங்கள் செய்திடாய்
எட்டாதகனிக்கு யாஜித்துநின்றேன் கிட்டுமோ கிட்டாதோ
[என்னசெய்வேன்நான். (வாணி)

2. பந்தமொழிந்தேன் பாவங்கள்தீர்ந்தேன் உந்தனையே கெதியெ
[ன்றேன்
வந்தடைந்தேனே சுந்தரிசிவகாமி இகபரந்தன்னில் சாதகஞ்
[செய்குவாய். (வாணி)

மெட்டு - இதுதானே எழுமலே. தாளம் - ருபகம்.

பல்லவி.

இதுதானே ஆலாஸ்யக்ஷேத்திரம் இத்தனைநாளறியேன்.

அனுபல்லவி.

இதுவோ அதுவோ என்று இருந்தேன் இத்தனைநாள் (இதுதானே)

சரணம்.

1. வந்தேனுந்தன் பாதம்தேடி பாதமலர் தேடி
உன்சித்தமிரங்கலியோ தேவி-மீனாக்ஷி (இதுதானே)

2. அண்டசராசரங்களையும் ஆதரிப்பாயே
மண்டலத்தே உண்டுமிழ்ந்த மாதுமீனாக்ஷி (இதுதானே)

3. கண்டந்தன்னில் விழந்தரித்தவன் காதலியாளே
புண்டலிகதளநேத்திரனுக்கு பின்புரந்தாயே. (இதுதானே)

4. அம்பிகையே நம்பிவந்தேன் ஆதரிப்பாயே
கந்தன் கணபதியை பெற்றதேவியே (இதுதானோ)

5. இன்பமகா என்னையாள்வாய் ஈஸ்வரியாளே
என்துன்பம் துலைத்திடுவாய் தேவிமீனாக்ஷி. (இதுதானோ)

6. சிந்தனைகள் செய்யவேண்டாம் சீக்கிரம்வாராய்
வந்தடைந்தேன் உந்தன்பாதம் சிவகாமிசுந்தரியாள். (இதுதா)

7. வந்தனங்கள் செய்துநின்றேன் சுந்தரியாளே
வந்துஎன்னை காக்கவேணும் முத்துமீனாக்ஷி. (இதுதானோ)

மெட்டு - தேடித்தேடிப் பார்த்து. தாளம் - ரூபகம்.

பல்லவி.

தேடித்தேடிப் பார்த்துவந்தேன் தேவிமீனாக்ஷியை.

அனுபல்லவி.

அண்டசராசரங்களுக்கும் ஆதாரமாய் நின்றிட்டாய்
மங்கையைப்போல் வடிவங்கொண்டு மாமதுரையில் வந்திட்டாய். ()

சரணம்.

1. இஷ்டமுடன் நம்பிவந்தேன் ஈஸ்வரியே உந்தனை
என்கஷ்டங்களை விலக்கியிப்போசற்றேகடைக்கண்பார்த்திடாய்.

2. சுந்தரி மீனாக்ஷிநீ செல்வக்குமாரியே
வல்லிசிவ காமியர்க்கு சாதகமே செய்திடாய். (தேடி)

மெட்டு - அய்யாமலை பழனி. அடதாளம்.

பல்லவி.

அம்பிகையே மீனாக்ஷி ஆதரிப்பாய் லோகசாக்ஷி.

அனுபல்லவி.

கஷ்டங்களை விலக்கி காதலியே உந்தனுடன்
இஷ்டத்தொண்டருடன் யேர்கஊயாய் சேர்க்கவேணும். (அம்பி)

சரணம்.

1. பாம்பையணிந்திட்டவன் தேவி உன்பதங்களைநான் தேடி
பார்முழுதும் அலைந்தேன் பார்வதியாளே உன்னை
இந்தவடிவைப்போலே எங்கிலும் கண்டதில்லை (அம்பி)

2. உம்பர்கள் பணிந்திட்டதேவி இன்பமாய் இங்குதித்த மீனாக்ஷி
பொத்தாமரையி லுதித்த உத்தமியாளே உன்
சித்தமிரங்கி என்னை சற்றே கடைக்கண்பாராய் (அம்பி)

3. வந்தனங்கள் செய்தேனே சுந்தரி சிவகாமிநானே
பொற்பாதம் காணுமல் பூமிஎல்லாம் அலைந்தேன்
இப்போதே இங்கேகண்டேன் ஈஸ்வரி அருள்புரிவாய் (அம்பி)

மெட்டு. காவடிச்சிந்து ஆறுமுகவடிவேலவனே.

பல்லவி.

சுந்தரிமீனாக்ஷி எந்தனுடைநாவில் சீக்கிரம் வந்துதிப்பாய்
உன்மைந்தனை போலென்னை வந்தென்னை ஆதரி வந்தனம்செய்து [சொன்னேன்.

அநுபல்லவி.

தாயேநீமீனாக்ஷி உந்தனுடைபாதம் தஞ்சமென்றோடி வந்தேன்
நீவஞ்சனைசெய்யாதே வந்து என்னாவில் சுந்தரி உதவிசெய்வாய்

சரணம்.

1. கொஞ்சபிரபஞ்சத்து மாய்கைகள் எந்நெஞ்சில் குடிவைத்துக் [கொண்டலைந்தேன்
என்னைவஞ்சித்திடும் துஷ்ட பஞ்சமாபாதகன் வசத்தில் பட்ட [லைந்தேனே

2. ஜோதிசுவரூபமான தீபம்பிரகாசிக்க தேவிநீ தயவுசெய்வாய்
என் சித்தத்தைவிட்டகலாதே எப்போதும் தெரிசனந்தருவாய் [சொன்னேன்.

3. பந்தங்கள் வந்தென்னை பாம்புபோல் சுற்றுதே
பாவிநான் என்னசெய்வேன்
உன்பாதமே கெதியென்று பார்த்திங்குவந்தேன் நான்
பாதுகார்த்திடுவாயே சொன்னேன்.

4. மாயவன் தங்கையே மாமணி மீனாக்ஷி
மானிலந்தன்னில் வந்தாய்
மாயம் செய்யாதே நீ வல்லிசிவகாமி
வந்தடைந்தேனே உன்னை.

மெட்டு - சிதம்பரம் போகாதே. தாளம் - திருபுடை.

பல்லவி.

அம்பாள் மீனாக்ஷி ஆதரிப்பாயே சொன்னேன் சொன்னேன்.

அனுபல்லவி.

தெக்ஷிணாகைலாயத்தில் தென்பாண்டியராஜனுக்கு
பக்ஷமதாய்வந்துதித்த பார்வதிதேவியே
இஷ்டமுடனே இனி எங்களை ரெக்ஷிப்பாய்
ஈஸ்வரியாளே இங்குவந்துதித்தாய். (அம்பாள்)

சரணம்.

1. ஆதியே பரஞ்சோதி ஸ்வரூபியே
நீதியே நிர்க்குணரூபியே லோகாம்பாள்
மாயவன்தங்கையே மாயம்செய்யாதே சொன்னேன்
அம்பிகைதேவியே ஆதரிப்பாயே. (அம்பாள்)

2. மாயவன்தங்கையே மான்மழுதரித்தோன்
திங்கள்சடையணிந்தவன் தேவிமீனாக்ஷியே
கந்தன் கணபதியை பெற்றெடுத்த காக்ஷியே
இன்பமதாகவே எனக்கருள்செய்வாய். (அம்பாள்.)

3. பாசவலையைநீக்கி உந்தன்பிரகாசவடிவைக்காண
தேடிஇங்கேவந்தேன் சுந்தரிசிவகாமி
காக்ஷிகொடுத்தென்னை கடைத்தேரச்செய்குவாய்
சுந்தரியாளே வந்தனம்செய்தேன். (அம்பாள்)

---

# மீனாக்ஷியம்மன் திக்குவிஜயம்.

## கும்மி.

வாணிசரஸ்வதி மங்களநாயகி வாக்கினில்வந்து அருள்புரிவாய்
சக்திகெணபதி ஸித்திகெணபதி பாலகணபதி பாதம்துணை
எட்டுமிரண்டுமரியாத நான் பட்டிஸ்ரீஜாதியாய்த்தான் ஜெனித்தேன்
உந்தனருளிணலிந்தசரித்திரத்தை எந்தனுடன்வாக்கிலெடுத்துரைக்க

சுந்தரிமீனாக்ஷிதிருவவதாரத்தைசீக்கிரமாகவேநானுரைக்க
வந்தனம்செய்தேன்சுந்தரியாளேவந்தெனக்குநீஉதவிசெய்வாய்
தேவ்பாண்டியனும்திருமதுரையில்வேட்டைக்குச்சென்றுவரும்போது
தாகமெடுத்துதவித்தந்தராஜனும்தடாகம்தன்னிலேவந்துநின்றான்
நின்றந்தராஜனும்தாமரைபுஷ்பத்தைவிசித்திரமாகவேகண்ணாலேகண்டான்
கண்டந்தராஜனும்கமலபுஷபந்தன்னைகைகளினாலேபரிக்கலுற்றான்
பார்வதிதேவியும்பாலவடிவாகிபாரினில்வந்தவதாரம்செய்தாள்
அம்பிகைமீனாக்ஷியென்றுமழைத்தவன் ஆனந்தமாகவேதானெடுத்தான்
காஞ்சனைமாலதேவியருமப்போகடுகியேராஜனை திரில்சென்று [தாள்
கையில்குழந்தையைவாங்கிக்கொண்டு அவள்காதலுடனேயெடுத்தணைத்
சுந்தரிமீனாக்ஷிசெல்வக்குமாரியாள்செங்கோலும்பட்டத்தைதான்தரித்து
இன்பமாகவேஇந்தநாடுகள் தன்னைஈஸ்வரியாளுமாண்டுவந்தாள்.

## வேறு.

பார்முழுதுமாண்டுவந்தாள்பாலகிமீனாக்ஷி
இஷ்டமுடன்திக்விஜயம்ஈசுவரியாள்செய்தாள்
அஷ்டதிக்கும்ஜெயித்துக்கொண்டு அம்பிகைமீனாக்ஷி
இஷ்டமுடன்கைலாயத்தில்ஈசுவரியாள்வரவே
வந்தவுடன் அம்பிகையும்நந்திதனைக்கண்டு
ஆரடாநீ இந்த்வாசல்கார்ப்பவன்பேர்சொல்லாய்
ஈசுவரனார்வாசல்தன்னை இன்பமுடன்கார்ப்பேன்
இங்கேவந்தசேதியைநீஈஸ்வரியேசொல்லாய்
பொதிமாடேஎந்தனுடன்பேருனக்குஉரைக்க இதுசமயம்
அல்லவேனீ அப்புறம்போய்நில்லாய்
மாடுகெடுவென்றுசொல்லிபேசிடவேவேண்டாம்
ஈஸ்வரனார் அறியுமுன்னே இப்போவேநீசெல்வாய்
சுந்தரியாள்வந்தசேதிசீக்கிரமேயறிந்து
பார்த்துமந்ததேவியரைபரமசிவன்உரைக்க
ஆரடிநீதேவியரே இவ்விடத்தில்வந்தாய்
வந்தவொருசேதிதனைஎந்தனுக்கேயுரையாய்
அஷ்டதிக்கும்ஜெயித்துக்கொண்டு இவ்விடத்தில்வந்தேன்
வந்திடத்தில்உந்தனொடுசண்டைமிகச்செய்ய
ஆசைகொண்டுவந்தேனிங்கே அம்பிகைமீனாக்ஷி

சுந்தரியாள்சொல்லலுமேசிந்தைதனில்களிந்து
சூலந்தன்னைகைபிடித்துளதிரில்வந்துநின்றார்
ஆணுவங்கள்உண்டானால்அம்பிகைமீனாக்ஷி
வில்லுதனைகைபிடித்துஇக்ஷணத்தில்நில்லாய்
பரமசிவன்பார்கலுமேஸ்தனங்களொன்றுமறைய
வில்லுதனையெறிந்துவிட்டுவெட்கமிககொண்டாள்
பூமிதனைப்பார்த்துமவள்காலினாலேகீரி
அபஜெயத்தைஅடைந்தோமென்றுஅவமானப்பட்டாள்
சுந்தரியேஅம்பிகையேஎந்தனுடன்தேவி
உந்தனுக்குமாலைசூட்டஇப்பொழுதேநானிசைந்தேன்
உந்தனுடன்நாடுதேடிஇக்ஷணத்தில்செல்லாய்
உந்தனுக்குமாலைபோடஅங்கையேநான்வருவேன்.

வேறு.

தேவியவள்ஈஸ்வரியாள்திக்கையெல்லாம்ஜெயித்து
தாயாருடைமடிதனிலேதலையையவள்குனிந்து
வெட்கமிகவடைந்துகொண்டுஈஸ்வரியாளிருக்க
கண்டுமந்தமாதாவும்பெண்மணியைபார்த்து
உந்தனுடஸ்தனங்களொன்றுமறைந்ததென்னசொல்லாய்
உந்தனுக்குமாப்பிள்ளைதான்யெங்கேயடிபெண்ணே
உந்தனுக்குதிருக்கலியாணம்செய்யவேணும்கண்ணே
உன்சிந்தைதன்னிலறிந்ததைநீசீக்கிறமேஉரையாய்
மாதாவும்கேழ்கலுமேமாதுமீனாக்ஷி
எட்டுதிக்கும்ஜெயித்துக்கொண்டுஈஸ்வரனைக்கண்டேன்
கண்டவுடன்எந்தனுடஸ்தனங்களொன்றுமறைய
ஈஸ்வரனார்எந்தனுடன்தேவியென்றேஉரைத்தார்
எந்தனுக்கு மாலைசூட்ட இங்கேயவர் வருவார்
கல்யாணபேரிகைதான் கடுகெனவே முழங்க

வேறு.

மங்களஸ்நானம்செய்து மங்கையவள்வரவே
கல்யாணகோலம்கொண்டு மணவரையில்வந்தார்
ஈஸ்வரனார்இதையறிந்து தொண்டுகிழவன்போலே

கல்யாணமண்டபத்தில் களிப்புடனேவந்தார்
குண்டோதரசிஷ்யர்தன்னை கைதனிலேபிடித்து
கல்யாணகோலங்கொண்டு சுந்தரேசர்வந்தார்
காஞ்சனமாலையவள் கடலாடநினைந்தாள்
எழுகடலைசுந்திரரும் இங்கேயேவரவழைத்தார்
காஞ்சனமாலையுடன் இராஜனும்கடலாடி
அனைவருமேபார்த்திருக்க அக்ஷணத்தில்மறைந்தார்
சுந்தரியும்சுந்திரர்க்கு மாலையதுசூட்ட
தேவியர்க்குஈஸ்வரனார் மாங்கல்யம்தரிக்க
தேவியுடதிருக்கல்யாணத்தை தேவர்களும்பார்த்து
அந்தரத்தில்துந்துமிகளை அரைநொடியில்கொட்ட
தேவர்களும்முனிவர்களும் கூட்டங்கூட்டமாய்க்கூடி
மந்தாரமலர்கொண்டு புஷ்பத்தைவருஷிக்க

வேறு.

கண்டுமந்தமருமகனை காஞ்சனமாலையவள் ஏதுரைப்பள்
ஆண்டிக்கோபெண்கொடுத்தேன் என்றுமவள் ஏங்கியேயிருந்துவிட்டாள்
ஏதடியோமீனாக்ஷி கிழவனையோ மாலையிட்டாய்
உந்தனுடதலையெழுத்து மீனாக்ஷி இப்படியோயிருந்ததுதான்
சமயல்செய்தஅன்னங்களை மீனாக்ஷி என்னநான்செய்வேனென்றாள்
சம்மந்திஒருவரையும் இவ்விடந்தில்காணேனே என்னசெய்வேன்
குண்டோதரன்தனையழைத்து ஈசுவரனார்மீனாக்ஷியண்டைவந்து
என்னுடையசிஷ்யனுக்குமீனாட்சி இப்போதேஅன்னமிடாய்

வேறு.

ஜாடராக்கினிதன்னை குண்டோதரன் குக்ஷியில்வைத்து
அன்னம்போய்புஜித்து வாவென்றனுப்ப
குண்டோதரனும் பாகசாலையில் வந்து
அன்னங்களத்தனையும் புஜித்துமே நின்றான்
இன்னம் பசிக்கிறதே என்னநான் செய்வேன்
ஈஸ்வரியே யெந்தனுக்கு உரையுமென்றார்
பிலாக்காய் பரங்கிக்காய் பூஷணிக்காயும்

அப்படியேவாரியவன் வாயிலேபோட்டான்
சுந்தரேசர்தன்னிடத்தில் சிஷ்யனும்வந்து
தாகமிகவெடுத்து தவிக்கிறேனென்ருர்
ஈஸ்வரனேஎந்தனுடன் தாகந்தன்னை
தணிக்கவேவேணுமென்று கேட்டுமேநின்ருர்
பரமசிவன்கேட்டுமங்கே கையைவைக்க
ஆறுபெருகியங்கே ஓடியேவர
அப்பா சிஷ்யனே குண்டோதரனே
வைகையாற்றுஜலந்தன்னை அருந்துவாயென்ருர்
மீனாக்ஷிதிருக்கல்யாண வேடிக்கைதன்னை
சகலரும்பார்த்திருந்து சந்தோஷமானார்
மீனாக்ஷிசுந்திரர்க்கு மங்களம்
கந்தன் கணபதிக்கு மங்களம்
பக்தஜனகூட்டங்கட்கு நித்தியமங்களம்
நித்தியானந்தருக்கு சுபமங்களம்
நிகரந்தசுந்திரர்க்கு சுபமங்களம்
நெற்றியில் கண்படைத்தவர்க்கு மங்களம்
உத்தமிசிவகாமியருக்கு நித்தியமங்களம்.

---

## தாலாட்டு.

மலையத்துவஜபாண்டியனுமே மதுரைமாநகரந்தன்னை
மகிமையுடன் ஆண்டுவந்தான் மகுத்துவத்தையான் உரைப்பேன்
பாண்டியராஜனுமே பார்முழுதுமாண்டுவந்தான்
பிள்ளையில்லாச்செல்வமின்றி பெருஞ்செல்வமாண்டுவந்தான்
மைந்தனில்லாச்செல்வமின்றி மகத்தானராஜ்ஜியத்தை
மகராஜன்தானு மகிழ்ச்சியுடன் ஆண்டுவந்தான்
அசுவமேதயாகங்கள் அதிகமாகசெய்துவந்தான்
தொண்ணூற்றியொன்பதும் ஆனபிற்பாடு
இந்திரனும்ஓடிவந்து இன்பமாகத்தானுரைத்தான்
நூறும்முடிந்துவிட்டால் நம்முடையபதவிதன்னை

கைக்கொள்வானென்றுசொல்லி இதற்குநான்என்னசெய்வேன்
தந்திரமாகவேறு யுக்தியெடுத்துரைப்பன்
புத்திரகாமேஷ்டியாகம் பரிபூரணமாய்செய்துவந்தால்
மைந்தன்பிறப்பானே மஹாராஜாவுந்தனுக்கு
செல்வன்பிறப்பானே சீமைதன்னை ஆள்வதற்கு
இந்திரனும்வாக்குரைக்க இன்பமாகராஜன்கேட்டு
புத்திரகாமேஷ்டியாகம் பரிபூரணமாய்செய்துவந்தான்
பார்வதிதேவியவள் பாலவடிவாகி
யாககுண்டத்தில் அம்பிகையாளவதரிக்க
ஆவலுடன்ராஜன் அக்ஷணத்தில்தானெடுக்க
காஞ்சனமாலையுடன் கைதனிலேகொடுக்கலுற்றான்
புத்திரனைவேண்டிநாம் பெருந்தவங்கள்செய்திருந்தோம்
புத்திரியாகத்தான்பிறந்தாள் இதற்குநாம்என்னசெய்வோம்
ஸ்தனங்களும்மூன்றுச்சே வென்றுராஜனும்கலங்கிநிற்க
ஆகாசவீதியிலே அசரீரும்வந்துநின்று
தாஷ்டீகமாகவேறு வாக்கையெடுத்துரைப்பன்
பார்வதிதேவியவள் பார்முழுதுமாளவந்தாள்
ஈஸ்வரிதேவியவள் இன்பமுடனாளவந்தாள்
மகுடமுடிசூட்டி மண்டலத்தைஆளச்செய்வாய்
செங்கோலும்பட்டத்தை செல்விக்கேதானளிப்பாய்
ஈஸ்வரிக்கிநாயகனாய் ஈஸ்வரரும்வரும்போது
ஸ்தனமும்மறைந்துவிடும் சிந்தையில்கவலைவேண்டாம்
அசரீரும்வாக்குரைக்க ஆனந்தமாய்ராஜன்கேட்டு
பாலகியைதானெடுத்து பட்டாலேபோத்திக்கொண்டு
வாய்துடைத்துகண்துடைத்து மதிமுகத்தைமுத்தமிட்டு
மாரோடேசேர்த்தணைத்து மாளிகைக்கேகொண்டுசென்றாள்
கண்ணுக்குமையெழுதி கஸ்தூரிபொட்டுமிட்டு
உச்சியிட்டுமுத்தமிட்டு உத்தமியைசீராட்டி
கொத்துசலங்கையிட்டு சாயக்கொண்டையிட்டு
அரைவடமும் கிங்கணியும் அம்பிகைக்கே தானளித்து
பச்சைமரகதத்தால் பலகைகளும்தான்சேர்த்து
பசும்பொன்னால்சங்கிலியும் வடங்களையும் தான்பூட்டி

பஞ்சணிமெத்தைமேலே சுந்தரியைவளரவிட்டாள்
பேசகிளியும் சீராட்டஉத்தமியும்
பத்தினிமார்அனைவருமே உத்தமிக்கேபாடலுற்றார்
என்ஆராரோஆராரோ ஆரிரரோஆராரோ
நாடுதன்னையாளவந்த நாயகியேகண்வளராய்
பூமிதன்னையாளவந்த பூமகளே கண்வளராய்
சீமைதன்னையாளவந்த செல்வியேகண்வளராய்
சுந்தரிமீனாக்ஷி இந்தவிதம்கண்வளராய்
வல்லிசிவகாமியரும் தெரிசனமேகண்டுவந்தேன்

---

## மீனாக்ஷியம்மன் கப்பல்.

85516

தா தா தா மீனம்பிகையே தருணமிதுசரணமம்மா
த்திவிநாயகரே சரஸ்வதியே முன்னடவாய்
ம்பிகையாள் அவதாரந்தன்னை அன்புடனேகப்பல்பாட
ரமெனக்கு தரவேணும் வையகங்களெல்லாம்புகழ

மூடு.

கைலாயகிரிதனிலே பார்வதியுடனே
பரமசிவனும் வசித்துமேயிருகக
பக்தஜனங்களும் சூழ்ந்துமேநிற்க
ஈஸ்வரனும் திருவாய்மலர்ந்தருளிசெய்தார்
பூலோகந்தன்னிலே பாண்டியநாட்டில்
மீனாக்ஷிசுந்தரராய் அவதாரஞ்செய்வோம்
அறுபத்திநாலு லீலைகள்செய்வோம்
பக்தர்களாய் அனபேரும் வருகுவீர்நீங்கள்
அந்தசமயந்தன்னிலொரு விமானம்
இந்திரவிமானமது கைலையில்வரவே
அனபேருங்கூடியே விமானத்தின்மீது
ஆரோகணித்து வருகுதய்யாபாராய்

O2P.417
N12

ஆகாசக்கப்பலொன்று வருகுதையாபாராய்
பாண்டியநாடுநோக்கி வருகுதய்யாகப்பல்
பாரிலுள்ளஜனங்களும் பாவங்கள்தீர
பாண்டியநாட்டிலே கப்பல்வந்திறங்க
பக்திக்கடல்தன்னிலொரு முக்திதரும்கப்பல். (தா தா தா)

பாண்டியராஜனும் பிள்ளையில்லாமல்
பெருந்தவங்கள்செய்திடவே ஈசுவரனுங்கண்டு
ஈஸ்வரியேஎந்தனுடன் தேவியேகேளாய்
பொத்தாமரையில் உத்தமியேவந்து
மரகதவல்லியென்று மங்கையாயுதித்து
கலியுகத்துஜெனங்களுக்கு காக்ஷியளிப்பாய்
கலியாணசுந்திரர் கடம்பவனத்தில்
காக்ஷிகொடுக்கவே கண்டுமந்தருஜன்
சற்குருவைக்கண்டுராஜன் சரணமடைந்து
ஆவலுடன்ராஜனும் அக்ஷணத்திலெடுத்து
சிம்மாசனத்திலே இருவரையும்வைத்து
திருக்கல்யாணஞ்செய்து காக்ஷிகளைக்கண்டு
ஆனந்தமாகவே சந்தோஷங்கொண்டு
ஆறுமாதகாலந்தன்னில் இந்தநாடுதன்னை
ஈஸ்வரனை ஆண்டுவர ராஜனும்வேண்ட
ஆறுமாதகாலந்தன்னில் இந்தநாடுதன்னை
இன்பமுடனீஸ்வரியை ஆண்டுவரச்சொன்னார்
பாண்டியராஜனுட பக்திக்குகந்து
அறுபத்திநாலு லீலைகள்செய்ய
அளவிலா ஆனந்த சந்தோஷம்கொண்டான்
சாஸ்வதபதவிதன்னில் லேசாகசேர்ந்தான்
சுந்தரிசிவகாமி வந்தடைந்தேனும்மை
இகபரத்திலெந்தனுக்கு சாதகங்கள்செய்வாய்
இந்தவைபவம் எந்ததேசத்தில் இல்லையென்றேனே பக்தர்கள்
[கேளீர். (தா தா தா.)

# தாருகாவனக்கும்மி.

தாருகாவனந்தனிலே ரிஷிகளெல்லாமே
பத்தினிமாருடன்கூடியவாள் தவசுபண்ணினர்
பர்னகசாலையிலே பத்தினிமாரும்
பர்த்தாக்கள்சிசுருஷையை பண்ணிவந்தார்கள்
ரிஷிகளெல்லாம்கூடியவாள் ஓரிடத்திலே
தங்களுடையமகத்துவந்தன்னை பேசிக்கொண்டார்கள்
பத்தினிமார் அனைவருமே ஒத்துபேசிக்கொண்டு
தம்மைப்போலே உத்தமிகள் ஒருவரில்லையென்றார்
ஈசனும்விஷ்ணுவும் இருவருமாக
அவாளுடைய அகம்பாவத்தை அடக்கவந்தார்கள்
மஹாவிஷ்ணுமாயையினால் மோகினியாய்வந்து
ரிஷிகளுக்கு எதிரில்வந்து விளையாடிநின்றாரே
தவசுகளைவிட்டொழிந்து ரிஷிகளெல்லாரும்
மோகினியேவேண்டியவாள் வந்துநின்றாரே
அந்தசமயந்தன்னில் மோகினியானும்
மாயமாகமோகினியும் மறைந்துவிட்டாளே
மோகினியும் மறைந்துவிட ரிஷிகளெல்லாரும்
வெட்கமிக அடைந்துகொண்டு ஆசிரமம்வந்தார்
அந்தசமயந்தன்னில் ஈசனுமப்போ
அவதூதஸ்வாமியாக ஆசிரமம்வந்தார்
பிக்ஷையென்றுகூபிட்டவர் ஓடியேபோக
அனைவருமே பிக்ஷகொண்டு ஓடிவந்தார்கள்
சுவாமிகளே பிக்ஷதன்னை வாங்கிகொள்ளுமே
எங்கள்வேண்டுதலைக்கிகொஞ்சம் நீரெரங்கிக்கொள்ளுமே
உங்களுடையகைகளினால் எங்களைதொட்டால்
எங்களுடையஆவல்தன்னை தீர்த்துக்கொள்ளுவோம்
இந்தவிதம்சொல்லியவாள் கிட்டநெருங்கவே
சுவாமியுமந்தவேளை உத்திரவுசெய்தார்
ஆலாஸ்யக்ஷேத்திரத்தில் மீனாக்ஷிசுந்தரராய்

அவதாரம்செய்துநாம் அங்கேவருகுவோம்
பாண்டியநாடுதன்னில் செட்டிப்பெண்களாக
ஜெனித்துநீங்கள்வசித்திருங்கள் தெரிசனம்தருவோம்
வளைச்சட்டிவேஷம்கொண்டு அங்கேவருகுவோம்
வளையல்போட்டுஇஷ்டங்களை நிரவேற்றிக்கொள்ளலாம்
இந்தவிதம்சொல்லியவர் ஈசனும்மறைய
உத்தமிகளனைவருமே திரும்பிவந்தார்கள்
பத்தினிவரஅலங்கோலங்கள் புருஷனுங்கண்டு
ஞயானதிஷ்டியினாலேயவாள் அறிந்துகொண்டாளே
முன்னைவிடஅதிகமாக தவசுசெய்குவோம்
மோக்ஷபதவிதன்னில் நம்மைசேர்த்துக்கொள்ளுவார்
மீனாக்ஷிசுந்தரேசர் கிருபையைக்கண்டேனே
வல்லிசிவகாமியர்க்கு சாதகம்செய்வாய்

## சுந்தரேசர் வளையல் வித்தது.

காவடிச்சிந்து. மெட்டு வேளையோ விடிந்ததையா.

வாருங்கோடிபெண்மயிலே எந்தனுடநாடுதன்னில்
இன்பமாய்வளையடுக்க வந்தேனே
காணவென்று இங்கேவந்து நின்றேனே
தெக்ஷிணகைலாயமென்ற தென்பாண்டிநாடுதன்னில்
பக்ஷமதாய்வந்துதித்த பெண்பாவாய்
இஷ்டமுடன்வந்துதித்தாய் இன்பமாய்
பாண்டியநாடுதன்னில் பரமசிவன்வளையல்வித்த
பாங்கிளியேவேடிக்கையை பாரடி
இங்கேவந்துஎல்லோரும் சேரடி
பச்சவளைகருப்புவளை பார்வதியாள்தந்தவளை
பெண்மயிலேயுந்தனுக்கு போடவே
இச்சையுடன்இவ்விடத்தில் வந்தாளே
கோமட்டிபெண்களுமே கூட்டமாகயெல்லவரும்
கூடியவாள்வளையடுக்க வந்தாளே
அவாள்துன்பங்களுமிக்ஷணம் தீர்ந்தே

எந்தனுடவளையல்தன்னை உந்தனுக்குதரித்துவிட்டால்
இந்தக்ஷணம்கெர்ப்பமாவீர் பெண்களா
வந்தனங்கள்செய்யுங்கோடி கண்களா
சுந்தரிசிவகாமிசொன்ன சொல்மொழியையெல்லாரும்
நம்பியிந்தக்ஷேத்திரத்தில் வாருங்கோ
அம்பிகையேஇங்கேவந்து பாருங்கோ

## கோமட்டிபெண்கள் வளையடுக்க வருதல்.

மெட்டு அய்யா முருகேசா.

பல்லவி.

வாருங்கோடிபெண்ணே கூடுங்கோடிகண்ணே

சரணம்.

1. பாண்டியநாடுதன்னில் பார்க்கலாமேசுவரனை
வேடிக்கையாய்வருகிறததை வீதிதன்னில்காணலாமே (வா)
2. சுந்தரேசர்செட்டியென்று சீக்கிரமாய்வளையல்கொண்டு
கோமட்டிபெண்களுக்கு கூட்டியவர்வளையடுக்க (வா)
3. பச்சவளைநீலவளை பார்வதியாள்தந்தவளை
இஷ்டமுடன்உங்களுக்கு இப்போதேநான்கொண்டுவந்தேன் ()
4. அம்பிகையாள்மீனாட்சி அருள்செய்தாள்உங்களுக்கு
நம்பிநீங்கள்தரித்துக்கொள்வீர் பெற்றிடுவீர்பாலகனை (வா)
5. வந்தனங்கள்செய்துமிப்போ வந்தடைந்தேனுந்தன்பாதம்
சுந்தரிசிவகாமியர்க்கு சீக்கிரமேயருள்புரிவாய். (வா)

---

## நாரைக்கு முத்தி கொடுத்தது.

—— ——:o:——

மெட்டு. ராஜாத்திராஜன் தருமனும்.

கும்மி.

பல்லவி.

பாண்டியராஜனுமே மதுராமாநகர்
நாடுதன்னை ஆண்டுவந்தான் அனைவரும்புகழ்

சரணம்.

1. மதுராபுரிக்கிதென்கரையில் தாமரைதடாகத்தில்
நாரையென்றபட்சியொன்று அங்கேவசித்திட
ஜெலங்களுக்குள்ஜெந்துவே புஜித்துமங்கேஜீவிக்க
அந்தவேளைஜெலங்களெல்லாம் சோஷித்தங்கேபோகவே (பா

2. பசியுமப்போமதிகங்கொண்டு நாரையுமப்போ
மலைதனிலேயேரி அங்கே மகத்துவங்கண்டு
அங்கேயுள்ளரிஷிகளை மண்டபத்தில்கண்டுமே
தடாகந்தன்னைகண்டுமப்போ பூரித்தங்கேநிற்கவே (பாண்டிய)

3. அங்கேயுள்ளரிஷிகளெல்லாம்ஹாலாஸ்யமகத்துவம்
கதைகள்தன்னைநடத்திவர கேட்டுநாரையும்
தேவாதிதேவர்களும் அறியக்கூடாத
தெரிசனமேகாணவேணு மென்றுமனதிலே (பாண்டிய)

4. மலையைவிட்டுகீழிரங்கி கோவிலில்வந்து
பொத்தாமரைதன்னைக்கண்டு பூரித்துநிற்க
மீனாட்சிசுந்தரரை தெரிசனம்பண்ணி
ஏகமனதாய்சித்தத்துக்குள் தியானித்துநிற்க (பாண்டிய)

வேறு.

நாரையென்றபக்தனிற்க சோமசுந்திரரிந்துமே
மீனாட்சியாள்தேவியுடனே தெரிசனமேதந்திட்டார்
அரிப்பிர்மாதிகளறியக்கூடாத பாதந்தன்னைகண்டு
நாரையென்றபட்சிகண்டு தெண்டனிட்டுநிற்கவே
அளவில்லாதவானந்தங்கொண்டு சந்தோஷமிகக்கொள்ளவே
நர்த்தனங்கள்செய்துமப்போ பூரித்தங்கேநிற்கவே
நந்திகளுக்குமத்தியில் நடுவிலென்னைவைத்திடாய்
பிறவிதன்னைமாற்றியிப்போ பாதந்தன்னில்சேர்த்திடாய்

வேறு.

இன்னமொருவரங்களிப்போ கேழ்க்கவந்தேன்சுவாமி
பொத்தாமரைபுண்ணியதீர்த்தம் தன்னிலொருஜெந்து
பட்சிபரவைகளும் வசிக்கவேண்டாம்சுவாமி
ஜெலஜெந்துஎவ்வுயிரும் வசிக்கவேண்டாந்தேவா
இந்தவரம்கேட்டுநின்றேன் ஈஸ்வரனேஉம்மை

நாரையென்றபட்சியிப்போ நயமுடனேகேட்க
மீனாட்சிசுந்தரரும் நாரைக்குவரமளித்து
இன்னம்சிலபக்தருக்கு ஈசனும்வரமளித்தார்
உந்தனுடநாடுதேடி வந்தடைந்தேன்சுவாமி
சுந்தரிசிவகாமியற்குசீக்கிரமேயருள்புரிவாய்

## சித்தர் சரித்திரம்.

நான்முகன்தேவி சரஸ்வதியாளே நாயகியாளே மின்னட்வி
உந்தனருளினாலிந்தசரித்திரத்தை எந்தனுடவாக்கிலெடுத்துரைக்க
கந்தன்கணபதிபாதந்துணை சித்தர்சரித்திரமெடுத்துரைக்க
விக்னங்களொன்றும்வராமலேயிப்போ விக்னவினாயகர்காத்திடுவாய்
பாண்டியராஜனும் மதுராபுரியை மாநகர்தன்னை ஆண்டுவரா [டார்
அந்தசமயத்தில்சோமசுந்தரநும் ஆனந்தமாய்சித்தர்வடிவங்கொண்
மீனாட்சிசுந்தரர்சித்தர்வடிவமாய் வீதிகளெங்கும்வந்துநின்று
அற்புதமாகவேசெய்கைகளையிப்போ ஆனந்தமாகவேபாருங்கொடி.

வேறு.

மதுராபுரிதன்னிலொரு சித்தர்வடிவங்கொண்டார்தேவர்
அற்புதசெய்கைகளை ஆனந்தமாய்செய்துவரார்ஈசன்
ஆண்களெல்லாம்பெண்ணாக்கி பெண்களெல்லாமாணாக்கி
விபூதிமகிமையினால் செய்துவந்தார்சுவாமி
ஆகாசவீதியிலே அளாவிவரும் மேகங்களைப்பிடித்து
வாயிலவர்பிழிந்துகொண்டு ஓயரேயவர்விட்டெறிந்தார்சித்தர்
நொண்டிமுடம்கூன்குருடு அனைவரையும்கண்களினால்பார்த்து
தம்முடையதிருவருளால் நோய்களைதீர்த்துவந்தார் ஈசன்
தண்ணீரில்லாதடாகந்தன்னில் தண்ணீருண்டுபண்ணிவைத்தார்
தண்ணியில்லாகுளந்தனிலேதாமரையைமுளைக்கவைத்தார்சுவாமி[ன்
மங்கையெல்லாம்கிழவியாக்கிகிழவியெல்லாம்மங்கையாக்கிவந்தார்ஈச
கோவிலுக்குமேலண்டையில் வந்தமர்ந்தார்சித்தர்

வேறு.

பாண்டியமகராஜனேனீர் அதிசயங்கள்கேட்டிடாய்
சித்தரென்றுவடிவங்கொண்டு நம்மதேசந்தன்னில்வந்தாரே

மாயாவித்தைகளெல்லாம் அற்புதமாய்செய்கிறார்
அதிசயத்தைக்கண்டுநாங்கள் ஆனந்தமாய்வந்தோமே
கேட்டுமந்தராஜனுமே மந்திரிகளையழைத்து
சித்தர்தன்னையென்னிடத்தில் சேர்த்திடுவீரென்றாரே
உத்திரவுதன்னைக்கேட்டுமந்திரி சித்தரண்டையில்வந்து
எங்களுடையமகராஜனண்டை சித்தரேநீர்வாருமே
சகலமுமறிந்தசித்தர்நாமே இங்கேயேநான்வந்தேனே
உங்களுடையமகராஜனாலே எனக்காகவேண்டியதில்லையே.
மந்திரிகளிந்தசெய்தி ராஜனுக்கறிவிக்க
ராஜனுமேவேகமுடன் கோவிலுக்குவந்தாரே
சேவர்களோடிவந்து சித்தரேநீர்வழிவிடும்
எங்களுடமகராஜன் வரும்வழிஇதுவென்றாரே

வேறு.

ராஜனும்வேகமுடன் சித்தரண்டைவந்து
என்னவற்புதம்செய்வீரிப்போ எந்தனுக்குரையும்
என்னசெய்யவேணுமையா சொல்லும்ராஜனே
முடிந்தமட்டும்செய்துவரேன் வேடிக்கைகளை
தைமாசபிரப்பானகையால் அந்தசமயத்தில்
ஆளொருவன்கைதனிலே கரும்பைக்கொண்டுவர
ராஜாவும்கண்டுமப்போ சித்தரைபார்த்து
கல்லானையைகரும்புதன்னை திங்கச்சொல்லுமென்றார்

வேறு.

அந்தசமயம்சித்தருமே ஆனையைப்பார்த்து
கடைக்கண்களினாலேயவர் ஜாடைகாண்பிக்க
ஆனையதுஓடிவந்து கரும்பைவாங்கியே
வாயிலதைசவிச்சுக்கொள்ள சாருமோடியே
கரும்புதன்னை ஆனைதிங்க ராஜனும்கண்டு
அதிசயத்தைபார்த்துமப்போ ஆனந்தங்கொண்டான்
சித்தருமேஆனைக்கிதன் கடைக்கண்காண்பிக்க
ஆனையதுஓடிவந்து ராஜனண்டையில்நிற்க
தன்னுடையதுதிக்கையினாலே ஆனையும்ராஜனுடைய
முத்துமாலையைபரித்து வாயிலேபோட்டுக்கொண்டு

முழிங்கிடவே ராஜனுங்கண்டு
கோபமிகவதிகங்கொண்டு கண்கள்சிவந்திடவே
சேவகர்களையழைத்துராஜன் சித்தரையடியுமென்முன்,
சேவகர்களும்கிட்டேநெருங்கி சித்தரண்டையில்வர
சித்தருமப்போ ஆவென்று அதட்டியேநிற்க
அந்தவேளையனைவருமே கல்லாய்சமைந்துநின்றார்
ராஜனுமேயதையறிந்து சித்தரண்டையில்வந்து
அறிந்தறியாமல் செய்தபிழையை
பெரியோர் பொறுப்பீரென்றார்

வேறு.

சித்தமூர்த்தியுந்தனைத்தான் நம்பிவந்தேன்பாண்டியன்நான்
ராஜனுமேவேண்டும்போது சித்தருமேமறைந்துவிட்டார்
ஆனையுமேஅச்சமயம் கல்லாகசமைந்துநிற்க
ஆகாசவீதியிலே இடையின்மேலேயேறிஈசன்
அம்பிகையாள்தேவியுடன் ஈஸ்வரனும்வந்துநின்றார்
ராஜனுமேதெண்டனிட்டு வரங்கள்தன்னைகேழ்க்கலுற்றான்
எந்தனுடசேனைகளை காப்பாற்றவேணுமென்றான்
இந்திரவிமானத்துக்கு அருகாண்மையிலமர்ந்துநிற்க
வேணுமென்றுராஜனுமே வேண்டிநின்றான்ஈஸ்வரனை
ராஜனுக்குவரமளித்து ஈசனுமேமறைந்துவிட்டார்
சுந்தரருக்குபக்கத்திலே சித்தராகவந்தமர்ந்தார்
பாண்டியனும்பிரதிதினமும் தெரிசனங்கள்செய்துவந்தான்
வல்லிசிவகாமியர்க்கு சாதகங்கள் செய்திடுவாய்

---

# மீனாக்ஷிஸ் துதி

---

பல்லவி.

இன்னம்வரக்காணேனடி மீனாட்சிநான்
உன்னை தஞ்சமென்றுநான் அஞ்சலிந்துநின்றேனம்மா

அனுபல்லவி.

இன்னம்வரக்காணுமலே இருக்கிறாய்என்னசெய்வேன்
என்னமோமனதிலே என்னவருத்தந்தானே.
வரக்காணேன் நான்பொறுக்கேனே
உன்னை மறக்கேனே. (இன்னம்)

சரணம்.

1. ஒப்பில்லா சுந்தரி உத்தமசவுந்தரி
மெய்ப்பொருள்திகம்பரி மகுடாசுரஸம்ஹாரி
ஓங்காரி ரீங்காரி
ஒய்யாரி கௌரி
பாண்டியராஜன் குமாரி (இன்னம்)

2. சூட்சிஅருளாட்சி சுவர்ணமீனாட்சி
ஆட்சிகமலாட்சி அம்மா விசாலாட்சி
முத்தாட்சி என்னைரெட்சி
காமாட்சி தாயே
கருணை கடாட்சி. (இன்னம்)

3. பூரணி காரணி பொன்மலர்நாரணி
நாரணி கல்யாணி நறுமலர்வேணி
சுகபாணி ருத்திராணி
வாரணி ஆவுடை
கன்னிகையே வாணி. (இன்னம்)

4. சுந்தரிசிவகாமி வந்தனம்செய்துநின்றேன்
தொந்தங்கள் ஒழிந்தேநான்
தோதகம் செய்யாமல்
வருவாயே வரந்தருவாயே
எனக்கருள் புரிவாயே
கருணையுடனேகார்த்து கவலைகள்தீர்த்திடுவாய். (இன்)

35516

## மங்களம்.

மீனாட்சிசுந்தரருக்கு மங்களஞ்சொன்னேன்
கந்தன்கணபதிக்கு மங்களஞ்சொன்னேன்
கலியுகத்திஜெனங்களுக்கு மங்களஞ்சொன்னேன்
காட்சிதருமய்யனுக்கு மங்களஞ்சொன்னேன்
அண்டமதைஅளந்தவர்க்கு மங்களஞ்சொன்னேன்
பிண்டங்களைபிடித்தவர்க்கு மங்களஞ்சொன்னேன்
தொண்டர்களைகார்த்தவர்க்கு மங்களஞ்சொன்னேன்
சுந்தரிசிவகாமியர்க்கு மங்களஞ்சொன்னேன்.

முற்றிற்று.